[1972 நவம்பர் 13

திருமலைக்குச் செல்ல தமிழ்நாடு அரசு போக்குவரத்து பேருந்துகள்.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துப் பேருந்துகள், ஆந்திர மாநிலத்திலுள்ள திருமலைக்குச் செல்லவிருக்கின்றனவா ?

(இ) ஆமெனில், இது குறித்து தமிழ்நாடு அரசு ஆந்திர அரசுடன் எவையேனும் ஏற்பாடுகள் செய்து கொண்டுள்ளதா ?

(உ) ஆமெனில், அவை குறித்த விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) தமிழக அரசு போக்குவரத்துத்துறை பேருந்து வண்டிகளை திருமலைக்குன்றுகள் வரை ஓட்டிச் செல்வதற்கு ஒரு செயற்குறிப்பு இருக்கிறது.

(இ) இல்லை.

(உ) கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

4. ஒத்திவைப்புத் தீர்மானம்.

கண்ணமங்கலத்தில் காவல் துறையினரால் விளைவிக்கப்பட்டிருக்கும் பீதி நிலைமையையும், விருத்தாசலம், போடிநாயக்கனூர், இராமநாதபுரம் ஆகிய இடங்களில் ஏற்பட்டுள்ள நிலைமையையும் குறித்து.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்ற விதிகளின் 44-வது விதியின் கீழ் திரு. எல். பலராமன், எம்.எல்.சி., அவர்கள் பின்வரும் ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்பு கொடுத்துள்ளார். அதாவது :—

" to discuss the unprovoked terror leashed out on the inhabitants in Kannamangalam by the Police entering into the private houses and beating the inmates therein and the similar incidents in Vridhachalam, Bodinayakanur and Ramanathapuram and the death of two persons one in Kannamangalam and the other in

Vridhachalam and the consequent unrest prevailing in the State and the continued closure of educational institutions under the orders of the State Government.''

இது எவ்வாறு ஒத்திவைப்புத் தீர்மானம் சம்பந்தப்பட்ட சட்ட மன்ற விதிகளின் கீழ் வரும் என்று சுருக்கமாகக் கூற வேண்டு மென்று திரு. எல். பலராமன் அவர்களை அழைக்கிறேன்.

திரு. எல். பலராமன் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, இன்றைக்கு தமிழ் நாட்டிலே ஏற்பட்டிருக்கக் கூடிய நெருக்கடி யான ஒரு நிலை—அது பார்வைக்கு ஏதோ கட்சிப் பிரச்சினையாக இருந்தாலும்—இன்றைக்கு பொதுப் பிரச்சினையாக மக்களிடையே உருவாகியிருக்கின்றது. அதன் காரணமாக, ஆங்காங்கே கலவரங்கள், துப்பாக்கிச் சூடுகள், தடியடிப் பிரயோகங்கள் என்பவைகளைப் பார்க்கும்போது, பொது மக்களுக்கு, தமிழ் நாட்டில் பாதுகாப்பு இருக்கிறதா, இல்லையா, என்ற கேள்வியைத் தான் எழுப்பவேண்டிய ஒரு சூழ்நிலையில் நாம் இருக்கிறோம். குறிப்பாக, கண்ணமங்கலத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சி. அங்கே கூட்டம் ஒன்றிற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஏற்பாடு செய்திருந்தனர். அந்தக் கூட்டம், அங்கே தேவையே இல்லை என்று கூட அங்கே அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் கூறியும் அதை மறுத்து, அங்கே கூட்டம் போடப்பட்டது என்று அந்தக் கட்சி நண்பர்களே என்னிடம் கூறினார்கள். அந்தக் கூட்டம் ஏற்பாடு செய்த பின்னால், அங்கே பேசிய ஒருவர், ஏதோ ஒரு தனி நபரைத் தாக்கிப் பேசும்போது, அங்கே கலவரம் நடந்ததாகவும் அந்தக் கலவரத்தின் காரணமாக, அங்கே பேச வந்தவர்கள்—பொறுப்பானவர்களாக இருந்ததால்—தங்கள் இடத்திற்கு வந்திருக்கலாம். ஆனால் அவர்கள் அதைச் செய்யாமல், அங்கே காவல் நிலையத்திற்குச் சென்று, அதனால் அந்தக் காவல் நிலையத்தின் அருகே துப்பாக்கிச் சூடு நடந்திருக்கிறது. கண்ணமங்கலம் என்பது ஒரு சாதாரண —சிறிய கிராமம், ஒரு மேஜர் பஞ்சாயத்தாகும். அந்த நகரப் பஞ்சாயத்திலே ஒரு கூட்டம் போட்டால், அதிகமாகப் போனால் ஒரு பத்தாயிரம் பேர்களுக்குள்ளாக கூடக்கூடிய ஒரு கூட்டமாகத் தான் இருக்கும். அந்தக் கூட்டத்தினைக் காவல் துறையினர்

கலைத்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு அந்தக் காவல் துறையினரின் அலுவலகத்தின் இடத்திற்கருகே சிறியதாகக் கூடிய ஒரு கூட்டம் —ஒரு 20 அல்லது 25 பேர் இருக்கக் கூடிய அந்த இடத்திலே சுட்டார்கள் என்றால், இந்தப் பொறுப்பு மிக்கவர்கள் தான் அதற்குக் காரணம் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதன் காரணமாக, சினிமாவிற்குச் சென்ற ஒரு இளைஞன்—பள்ளி மாணவன்—சிறு பாலகன் இறந்தான் என்பது பரிதாபத்திற்கும், அனுதாபத்திற்கும் உரியதாகும். அப்படி அங்கே அவ்வளவு வேகமாக, ஏதோ ஒரு சிலரின் உத்தரவின் பேரால் இந்த நிகழ்ச்சி நடந்திருக்கிறது என்று நான் குறிப்பிட முடியும் என்று தலைவர் அவர்களின் மூலமாக இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதன் காரணமாக, அந்த மாவட்டத்தில் ஆங்கிலப் பள்ளிகள் கூட, ஒன்றும் இரண்டாம் வகுப்பு இருக்கின்ற பள்ளிகள் எல்லாம் மூடப்பட்டிருக்கின்றன. கல்லூரிகள் பல நாட்களாக மூடப்பட்டிருக்கின்றன. இதை யெல்லாம் பார்க்கும்பொழுது, அங்கே நம்முடைய தரம், நம்முடைய ஆட்சிப் பொறுப்பு எங்கு சென்று கொண்டிருக்கிறது என்பதுதான் கேள்விக்குறியாக இருக்கிறது. பள்ளி மாணவர்கள் நிலை என்ன ஆகுமோ என்ற ஐயப்பாடு பெற்றோர்களிடையே நிலவிக்கொண்டு வருகிறது. பையன் படிப்பானா, தரம் உள்ளவனாக ஆவானா, அவனுக்குப் படிப்பு வருமா என்ற ஒரு நிலை இன்றைக்கு நாட்டில் நிலவுகிறது. அதற்கெல்லாம் காரணம் நம்முடைய அரசாங்கம் என்பதை ஞாபகப்படுத்துகிறேன். அந்தக் கண்ணமங்கலத்தில் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததோடு மட்டுமல்லாமல், துப்பாக்கிச் சூடு நடந்து பலர் காயப்பட்டு பீதிக் குள்ளாகியிருக்கிறார்கள். மேலும் அவர்களிடையே யார் யார் பேரில் என்ன வழக்குத் தொடருவார்களோ என்ற ஐயப்பாடு அங்கெல்லாம் பரவிக் கொண்டிருக்கிறது. இதே போன்று விருத்தாசலம், மற்றப் பகுதிகளிலும் ஏற்பட்டிருப்பதைப் பார்க்கும்போது, அமைதியில்லாத ஒரு நிலை தமிழ்நாட்டில் இருக்கிறது என்பதை இங்கே சுட்டிக்காட்டி அமைதி ஏற்படுத்துவது அரசாங்கத்தினுடைய கடமை என்பதை உணர்த்துவதற்காக இந்த அவையை ஒத்திவைத்து இதை

1972 நவம்பர் 13] *[திரு. எல். பலராமன்]*

விவாதிக்க வேண்டுமென்று நான் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு நண்பர் திரு. பலராமன் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின்மீது சில விவரங்களை நான் கூற விரும்புகின்றேன். பொதுவாக ஏதோ நாட்டில், தமிழ் நாட்டில், பெரிய நெருக்கடியான சூழ்நிலை உருவாகியிருக்கிறதென்றும் அதற்கு முழுக்க முழுக்க அரசாங்கம் தான் காரணம் என்றும் அவர்கள் குற்றம் சாட்டிவிட்டு குறிப்பாக கண்ணமங்கலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியையும் அவர்கள் கொடுத்திருக்கின்ற ஒத்திவைப்புத் தீர்மானத்திலே ராமநாதபுரம், விருத்தாசலம், போடிநாயக்கனூர் ஆகிய ஊர்களைப்பற்றிய விவரங்களையும் தந்து, நாட்டிலே பல்வேறு பகுதிகளில் இந்தச் சூழ்நிலை இருப்பதாக எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். அங்கொன்றும் இங்கொன்றுமாக கடந்த ஒன்று அல்லது ஒன்றரை மாத காலமாக தமிழ் நாட்டில் கலவரங்கள் சிற்சில இடங்களில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆனால் இந்தியாவிலே மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிற நேரத்தில், சட்டம், அமைதி, ஒழுங்கு இவைகள் கெட்டுவிட்டன என்று தமிழ் நாட்டைக் குறை கூறுகின்ற நேரத்தில், மற்ற மாநிலங்களில் நடைபெற்றிருக்கின்ற துப்பாக்கிப் பிரயோகங்கள், ஊர் அடங்குச் சட்டங்கள் இவைகளை எல்லாம் நாம் மறந்துவிடக் கூடாது. அமைதியில்லை, அமைதியில்லை என்று சொல்லுகிற காலத்தில்,—நான் இங்கே இந்த தீர்மானத்தைக் கொண்டுவந்த உறுப்பினரைச் சொல்லுவதாக தயவு செய்து கருதிக் கொள்ளக் கூடாது—சில பேர் அமைதியில்லை என்று சொல்லிக் கொண்டு அமைதியில்லாமல் போக வேண்டும் என்கின்ற காரியத்திலே இன்றைக்கு நம்முடைய மாநிலத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதை அவர்கள் விரும்புகின்றார்கள். கடந்த அக்டோபர் திங்களில் அவர்கள் குறிப்பிட்டதைப் போல், தனிப்பட்ட ஒரு நபரைத் தாக்கிப் பேசினார்கள் என்று குறிப்பிட்டார்களே, அப்படி தனிப்பட்ட ஒரு நண்பர் ஒரு கட்சியினுடைய கட்டுப்பாட்டை மீறிய காரணத்திற்காக, எந்த ஒரு கட்சியிலும் கட்டுப்பாடு மீறப்பட்டால் அந்தக் கட்சி

யினுடைய தலைமை என்ன நடவடிக்கை எடுக்குமோ அந்த நடவடிக்கையை இன்றைக்கு ஆளும் கட்சியாக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைமை எடுத்ததைத் தொடர்ந்து, சில அசம்பாவித நிகழ்ச்சிகள் நாட்டிலே நடைபெற்றிருக்கின்றன. அந்த நிகழ்ச்சிகளை நண்பர் திரு. பலராமன் அவர்கள் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பயன்படுத்திக் கொண்டு இந்த அவையிலே பதிய வைப்பது பொருத்தமானது என்று கருதுகின்றேன்.

10—10—72 அன்று திருச்சியிலே வன்முறையாளர்கள் அடங்கிய கூட்டம் ஒன்று 'மாலைமுரசு', 'தினத்தந்தி' போன்ற பத்திரிகைகளைத் தீயிட்டுக் கொளுத்தியும், அங்கே உள்ள 'தினத்தந்தி' அலுவலகத்தைக் கற்களைக் கொண்டு தாக்கியும், தெருவில் போடப்பட்டிருந்த குழல் மின் விளக்குகளை ஏராளமான அளவில் சேதப்படுத்தியும், அரசு பஸ்களைத் தாக்கியும் சேதம் விளைவித்தார்கள்.

11—10—72 அன்று திருநெல்வேலியில் சுமார் 150 பேர் ஊர்வலம் ஒன்றை நடத்தி நகரிலிருந்த திராவிட முன்னேற்றக் கழகக் கொடிகளையெல்லாம் வீழ்த்தி சேதப்படுத்தினார்கள். திராவிட முன்னேற்றக் கழக அனுதாபிகளையும் தாக்கி பீதியடையச் செய்தார்கள்.

12—10—72 அன்று லால்குடிக்கும் டால்மியாபுரத்திற்குமிடையே அரசு பஸ் ஒன்று நிறுத்தப்பட்டு சேதப்படுத்தப்பட்டது. இது குறித்து காவல் துறையினர் வழக்கொன்றும் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றார்கள். அதே நாளன்று திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த திருக்கோகர்ணத்தில் பஸ் ஒன்றைச் சேதப்படுத்தினார்கள்.

13—10—72 அன்று வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த ஆரணியில் உள்ளூர் நகரமன்ற திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரை சுமார் 1,000 பேர் அடங்கிய வன்முறைக் கும்பல் ஒன்று தாக்கி அவருடைய காருக்கு சேதத்தையும் அவருக்குக் காயத்தையும் உண்டாக்கினார்கள். அவர்களால் அரசாங்க பஸ் ஒன்றும் சேதப்படுத்தப்பட்டது. 13—10—72 அன்று ஆம்பூரில்

1972 நவம்பர் 13] [டாக்டர் மு. கருணாநிதி]

30 பேர்கள் கூட்டமாகச் சென்று அரசாங்க பஸ் ஒன்றைத் தாக்கி அதன் முன்பக்கக் கண்ணாடிகளையும் விளக்கையும் சேதப் படுத்தினார்கள்.

14—10—72 அன்று சென்னை நகரில் மாநகராட்சி மன்றத்திற்குச் சொந்தமான ஜீப் கார் ஒன்றை விஷமிகள் தீக்கிரையாக்கினார்கள். ஜீப் முழுவதும் சேதம் அடைவதற்குள் தீயணைப்புப் படையினர் அந்த இடத்திற்கு விரைந்து சென்று தீயை அணைத்தார்கள்.

15—10—72 அன்று பழனியில் சுமார் 1,000 பேர் அடங்கிய கூட்டம் ஒன்று திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் பி. எஸ். சேக்கின் கடையைத் தாக்கி இஸ்மாயில் என்கின்ற பணியாளர் ஒருவரைக் காயப்படுத்தினார்கள். பின்னர் கூட்டத்தினர் அப்துல் லத்தீப்பின் கடையைத் தாக்கி அங்கே இருந்த கழகத் தலைவர் படங்களை வெளியில் அகற்றி வன்முறை நிகழ்ச்சிகள் பல புரிந்தார்கள்.

15—10—72 அன்று தூத்துக்குடியில் தனியார் பேருந்து எண். 4805 அதனுடைய ஓட்டுநர் 26 பேர்களால் தாக்கப்பட்டு காயம் அடைந்தார், பேருந்தும் சேதம் ஆக்கப்பட்டது.

17—10—72 அன்று சேலத்தை நோக்கி திருச்சியிலிருந்து சென்று கொண்டிருந்த அரசாங்க பஸ் ஒன்று தாக்கப்பட்டு அதனுடைய கண்ணாடிகள் சேதப்படுத்தப்பட்டன.

20—10—72 அன்று காரைக்குடியில் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கலந்துகொண்ட கூட்டம் ஒன்றில் கற்கள் வீசப்பட்டன. அதில் காவலர் ஒருவர் காயம் அடைந்தார். கூட்டம் முடிந்து அமைச்சர் அவர்களும், மதுரை முத்து, எம்.எல்.சி. அவர்களும், திரு. தென்னரசு, எம்.எல்.சி. ஆகியோரும் காரைக்குடியிலிருந்து திரும்பும் வழியில் சிலர் கற்களால் தாக்கியதால் அமைச்சருடைய காருக்கு சேதம் விளைவிக்கப்பட்டது.

22—10—72 அன்று சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. வேழவேந்தன், திரு. பரந்தாமன் இருவரும் திருத்தணியில் நடைபெற்ற கழகப் பொதுக்கூட்டத்திற்குச் சென்றபோது, திரு. வேழவேந்தனுடைய கார் மறிக்கப்பட்டு தீ வைத்துக் கொளுத்தப் பட்டு, அந்தக் கார் அடியோடு சாம்பலாயிற்று. சம்பவம் நடந்த

இடத்திற்கு விரைந்து வந்த காவல் துறையினரையும் கூட்டத்தினர் கற்களை வீசித் தாக்குதல் நடத்தினார்கள்.

22—10—72 அன்று வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூரில் நடந்த திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்கூட்டம் ஒன்றில் கலவரம் விளைவித்த வன்முறைக் கும்பலைக் கலைப்பதற்காக காவல் துறையினர் கண்ணீர்ப் புகை பிரயோகிக்க நேரிட்டது. அதே நாளன்று வேலூர் நகரத்தில் வருவாய்த் துறை அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் கற்கள் சரமாரியாக வீசப்பட்டன. கூட்டத்தைக் கலைக்க காவல் துறையினர் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வெடிக்க நேரிட்டது. அன்று வீசப்பட்ட கற்களின் காரணமாக மேலவை உறுப்பினராக இருக்கின்ற திரு. தேவராஜ் அவர்களும், திரு. சாரதி, எம்.எல்.ஏ. அவர்களும் வேறு சட்டமன்ற உறுப்பினர்களும் நகராட்சிமன்ற உறுப்பினர்களும் கற்களால் தாக்குண்டார்கள்.

22—10—72 அன்று தர்மபுரி நகரில் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் முரசொலி மாறனுடைய காரை ஒரு கூட்டத்தினர் கற்களைக் கொண்டு தாக்கியதில் காரின் கதவுகளும் கண்ணாடியும் உடைந்தன.

22—10—72 அன்று ராமநாதபுரத்தில் நடந்த திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்கூட்டம் ஒன்றில் பெரும் கலவரம் விளைவிக்கப்பட்டு காவல் துறையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்கிற அளவுக்கு வன்முறை நிகழ்ந்தது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உணவுத் துறை அமைச்சர் அவர்களும் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கிருஷ்ணன் அவர்களும் கல்லெறிக்குள்ளாகி காயம் அடைந்தார்கள்.

22—10—72 அன்று மதுரை நகரில் சட்டமன்ற உறுப்பினர் திரு. திருப்பதி அவர்களின் வீட்டை, சிலர் கற்கள் வீசி தாக்கியிருக்கிறார்கள். இது குறித்து, காவல் துறையினர் வழக்கொன்று பதிவு செய்து விசாரணை நடத்துகின்றார்கள்.

24—10—72 அன்று வட ஆற்காடு மாவட்டம் ஆரணியில் நடந்த திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டம் ஒன்றைக் கலைப்பதற்கு முயன்றவர்களைக் காவல் துறையினர் விரட்டியடிக்க நேரிட்டது

1972 நவம்பர் 13] [டாக்டர் மு. கருணாநிதி]

அப்போது அவர்களால் நடத்தப்பட்ட கல்லெறிதலில் ஐந்து காவல் துறையினர் காயம் அடைந்தார்கள், ஒரு காவல் துறை வாகனம் சேதப்படுத்தப்பட்டது.

26—10—72 அன்று திருச்சி மாவட்டம் வேலன்விடுதியில் நடந்த திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்கூட்டத்திற்கு இரண்டு லாரிகளில் வந்திறங்கிய சுமார் 150 பேர் கற்களைக் கொண்டு தாக்கி கூட்டத்தில் கலவரம் விளைவித்தார்கள். கற்கள் வீசப்பட்டதால், ஒரு ஜீப்பும் ஒரு காரும் மற்றும் மேடைமீது பொருத்தப் பட்டிருந்த ஒலிபெருக்கி மின்சார சாதனங்கள் அனைத்தும் சேதம் அடைந்தன. பொதுமக்களும் காயம் அடைந்தார்கள். கூட்டத்தில் கலந்துகொள்ளச் சென்றிருந்த அமைச்சர் அவர்கள் மீதும் கற்கள் வீசப்பட்டன.

29—10—72 அன்று வட ஆற்காடு மாவட்டம் கண்ணமங்கலத்தில் நண்பர் திரு பலராமன் அவர்கள் குறிப்பிட்ட அந்த திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்கூட்டத்தில் ஏற்படுத்திய கலவரம் இறுதியில் காவல் துறையினர் துப்பாக்கிப் பிரயோகம் நடத்துகின்ற வகையில் கொண்டு சென்றுவிட்டது. அதில் தோப்பூர் திருவேங்கடம், எம்.எல்.ஏ. அவர்களும், உலகநம்பி, எம்.பி. அவர்களும், விஸ்வநாதன், எம்.பி. அவர்களும், ஏ. கே. வில்வம் அவர்களும் கலந்துகொண்டார்கள். அந்தக் கலவரத்திலே சிக்கிக்கொண்ட காரணத்தால், அவர்களைப் பாதுகாப்பதற்காக போலீஸ் நிலையத்திற்கு அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டார்கள். கலவரக்காரர்கள் போலீஸ் நிலையத்தைச் சூழ்ந்துகொண்டு, அதற்குள்ளே படையெடுத்த காரணத்தினால், துப்பாக்கிப் பிரயோகம் தவிர்க்க முடியாததாகிவிட்டது.

இப்போதுகூட 4—11—72 அன்று மதுரை மாவட்டம், நிலக்கோட்டை கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கட்சியினுடைய கொடி ஒன்றை நடுவதிலே தோன்றிய பிரச்சினை மூளுதலாக உருவெடுத்து, அதிலே சிலர் காயமடைந்திருக்கிறார்கள். 5—11—72 அன்று, சேலம் மாவட்டத்தில் உள்ள பாண்டமங்கலத்தில், அதேபோன்று புதிதாக அமைக்கப்பட்ட கட்சிக் கொடியை நடுவதிலே ஏற்பட்ட கலவரத்திலே காவல் துறையினர் காயம் அடைந்திருக்கின்றனர். போடிநாயக்கனூரில்

கண்ணமங்கலத்தில் காவல் துறையினரால் விளைவிக்கப்பட்டிருக்கும் பீதி நிலைமையையும், விருத்தாசலம், போடி நாயக்கனூர், இராமநாதபுரம் ஆகிய இடங்களில் ஏற்பட்டுள்ள நிலைமையையும் குறித்து

[டாக்டர் மு. கருணாநிதி] [1972 நவம்பர் 13

12—11—72 அன்று சொக்கன் என்கிற திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் ஒருவரும், பொன்னன் என்கிற இன்னொருவரும் கத்தியால் குத்தப்பட்டிருக்கிறார்கள் என்று இன்றைய தினம் செய்தி வந்திருக்கிறது. இவைகளையெல்லாம் பார்க்கிற நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கூட்டங்களில்தான் கடந்த அக்டோபர் திங்கள் 10-ம் தேதியிலிருந்து, இதுவரையில் கலவரங்கள் நடைபெற்றிருக்கின்றன என்கிற கணக்குத் தெரியும். இதை ஏதோ போலீஸ்காரர்கள் கொடுத்த விவரத்திலிருந்தோ, காவல் துறையினர் கொடுத்த விளக்கங்களிலிருந்தோ நான் தருவதாக யாரும் எண்ணத் தேவையில்லை. அக்டோபர் 10-ம் தேதியிலிருந்து இந்துப் பத்திரிகையில் பார்த்தாலும், தினமணிப் பத்திரிகையைப் பார்த்தாலும் அல்லது இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து பிரிந்துசென்றிருக்கிற நண்பர் களுக்காகவே தங்களுடைய பத்திரிகை முழுவதையும் பயன் படுத்திக் கொண்டிருக்கிற வேறு சில பத்திரிகைகளை எடுத்துப் பார்த்தாலும், இந்த விவரங்கள் அத்தனையும் அடங்கியிருப்பது தெரியும். அந்தப் பத்திரிகைகளின் தொகுப்புகள் அனைத்தையும் நான் கையிலே வைத்திருக்கிறேன். ஆகவே ஒரு கட்சி தமிழ் நாட்டை ஆளுகின்ற பொறுப்பை மக்களால் பெற்று, 1971-ம் ஆண்டு பொறுப்பினை ஏற்று, அந்தப் பொறுப்பை நிர்வகித்து வருகிறது. அவர்களுடைய ஆட்சி முறை சரியில்லை, நிர்வாகம் சரியில்லை என்றால், அதை மாற்றியமைக்கக்கூடிய அந்தப் பொறுப்பு மக்கள் கையிலே இருக்கிறது. அதனால்தான் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை ஜனநாயக ரீதியிலே தேர்தலை நாம் நடத்திக்கொண்டிருக் கிறோம். அப்படிப்பட்ட தேர்தலை நடத்துகிற நேரத்திலே, இடை யிலே கல்லெறிதல், கலகம் விளைவித்தல், சில இடங்களிலே அமளி விளைவித்தல், கார்களைத் தாக்குதல், சில பஸ்களைக் கொளுத்துதல், மாணவர்களைத் தூண்டிவிடுதல் ஆகிய இந்தக் காரியங்களால் ஒரு இயக்கத்தை, ஒரு ஆட்சியைக் கவிழ்த்துவிடலாம் என்று எண்ணுவது, ஒரு முன்மாதிரியாக ஆகிவிடக்கூடாது என்ற அச்சத்தைத்தான் நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். கல் எறிகின்ற காரணத்தாலேயே மக்கள் சக்தி வாய்ந்துவிட்டது என்றால், இனிமேல் நாம் வாக்குச்சீட்டுக்களை நம்பவேண்டியதில்லை. போடப்படுகிற வாக்குச் சீட்டுக்களை

எண்ணிப் பார்ப்பதை விட்டுவிட்டு, வீசப்படுகிற கற்களை எண்ணிப் பார்த்து, இந்த ஆட்சியைக் கவிழ்த்துவிடலாம், இவ்வளவு கற்கள் விழுந்திருக்கின்றன என்கிற ஒரு முடிவுக்குக்கூட வந்துவிடலாம். (சிரிப்பு) ஆகவே கலகம் செய்வதால், ஒரு கட்சி செல்வாக்கு இழந்துவிட்டது என்பதை நிரூபிக்க முடியுமானால், அதை எல்லாக் கட்சிகளும் தமிழ் நாட்டிலே பின்பற்றத் தொடங்கிவிட்டால், பிறகு தமிழ் நாடு ரணகளமாகிவிடும், காட்டுமிராண்டிகள் வாழ்கின்ற இடமாக மாறிவிடும். ஆகவே இதிலே எல்லாக் கட்சிக்காரர்களும் ஒத்துழைக்க வேண்டுமென்பதை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லுகிறேன். இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்திலே ஒரு இளம் மாணவன் மறைந்துவிட்டான், நான் அதற்கு என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். விருத்தா சலத்தில் ஒரு முதியவர் மறைந்துவிட்டார், ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களுடைய குடும்பத்திற்கு அரசாங்கத்தின் சார்பிலே தக்க அளவுக்கு உதவிகள் செய்யப்பட்டிருக்கின்றன. அந்த உதவிகளின் காரணமாகவே, அந்த இழந்த உயிர்களை நாம் பெற்று விடுவோம் என்று கூற முடியாவிட்டாலும், தவிர்க்க முடியாத அளவுக்கு இந்தச் சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன ஆனால் அதே நேரத்தில் முன்னேற்றக் கழகத்தை எதிர்த்துப் பேசப்படுகின்ற கூட்டங்களைக் கடந்த 1½ மாத காலமாகக் கவனிப்பீர்களேயானால், எல்லாக் கூட்டங்களிலும் கழகத்தினுடைய தலைவர்களையோ, அமைச்சர்களையோ எவ்வளவு தாக்குறைவாகப் பேசினாலும், அந்தக் கூட்டங்கள் அமைதியாக நடைபெறுகின்ற அந்தக் காட்சியையும், அதே நேரத்தில் பிரிந்து சென்றவர்கள் நடத்துகிற கூட்டங்களிலே நடைபெறுகிற அமைதிக்கு மாறாக, முன்னேற்றக் கழகத்தின் அமைச்சர்கள் கூட்டங்களிலே கலகம் விளைவிப்பதை இன்றைக்கு வழக்கமாகக் கொண்டிருப்பதையும் இந்த அவை உணர வேண்டும், இந்த அவையின் மூலமாக நாட்டு மக்கள் உணர்வார்கள் என்ற நம்பிக்கையை நான் தெரிவித்து, திரு. பலராமன் அவர்கள் கொண்டுவந்த இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தில், நான் இவ்வளவு விளக்கங்களை அளிப்பதற்குப் பயன் படுத்திய இந்த வாய்ப்பைக் கொடுத்தமைக்கு அவருக்கு நன்றியைக் கூறி, கண்ணமங்கலம் நிகழ்ச்சியைப்பற்றி அவர்

எடுத்துக் கூறியதற்கு நானும் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இனிமேல் இதுபோன்ற நிகழ்ச்சிகள் நாட்டில் நடைபெறுவண்ணம், நம்முடைய பிரச்சினைகளை ஜனநாயக ரீதியில் தீர்த்துக்கொள்ள வேண்டும். நாம் கட்டிக் காத்து வருகின்ற மரபு வழியிலே நாம் தீர்த்துக்கொள்ள வேண்டும். நாம் மக்களை நம்பியிருக்கிறோம். மக்களிடத்திலே வாக்குகளைப் பெற்று, நம்முடையப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்கின்ற வகையிலே நம்முடைய நாட்டிலே ஆண்டாண்டுக் காலமாகக் கட்டிக் காத்து வருகின்ற ஜனநாயக பாரம்பரியத்தைக் காப்பாற்றுவதற்கு எல்லாக் கட்சிகளிலே உள்ளவர்களும் ஒத்துழைக்க வேண்டும். இளம் மாணவ நண்பர்கள் ஒத்துழைக்க வேண்டும், அவர்களுடைய பெற்றோர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, இந்த விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை விவாதிக்கவேண்டிய அவசியமில்லை என்ற கருத்தை, தலைவர் அவர்களே, தங்களுக்குத் தெரிவித்து, அமர்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு, இப்பிரச்சினையை இங்கு விவாதிக்கவேண்டியதில்லை எனக் கருதுகிறேன். ஆகவே இப் பிரச்சினையை எழுப்ப என்னுடைய அனுமதியை மறுக்கிறேன்.

5. அறிவிப்பு.

அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு குறித்து

MR. CHAIRMAN : At a meeting of the Business Advisory Committee held at 3.30 p.m. to-day, it has been decided that the Hon. the Minister for Electricity will initiate the discussion on the Electricity Board Budget to-day and the further discussion thereon would continue to-morrow. (14th November 1972).

6 1972-73-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் வரவு-செலவுத் திட்ட அறிக்கை.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1972-73-ம் ஆண்டின் நிதி நிலை அறிக்கையும், 1971-72-ம் ஆண்டின் துணை நிதி